சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. 152 / 2020 C/W 154 / 2020

பெயர்: பாத்திமா ஸ்டாலின் ம.சா. 2 தேதி 27.03.2025

முதல் விசாரணை தொடர்ச்சி

சுகம் மருத்துவமனை விடுவிப்பு சான்று அசல் - ம.சா.ஆ-5, மருத்துவ பில் - ம.சா.ஆ-6, என்னுடைய ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் - ம.சா.ஆ.7 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது), மனுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் ஜேம்ஸ் என்பவர் புகார் கொடுத்தார். மேற்படி விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி விபத்தானது இரவு 10.15 மணியளவில் நடைபெற்றது. மேற்படி விபத்து நடந்தபொழுது திருவிழாவிற்காக முள்ளிபாடி என்கின்ற ஊருக்கு சென்றுக்கொண்டிருந்தோம். மேற்படி இருசக்கர வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்றால் எனது அண்ணன் ஓட்டினார் நான் பின் இருக்கையில் அமர்ந்திருந்தேன். மேற்படி வாகனமானது டி.வி.எஸ் போர்ட். மேற்படி விபத்து சமயத்தில் எங்களுக்கு எதிரே கிளாம்மர் என்கின்ற இருசக்கர வாகனம் வந்தது. எதிரே வந்த இருசக்கர வாகனம் தான் தவறாக வந்து எங்கள் மீது மோதிவிட்டது. என்னுடைய கவனக்குறைவால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சாலைவிதிகளை மதிக்காமல் விபத்தை எனது அண்ணன் ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. சம்பவத்தை எங்களை தவிர வேறு யாரும் பார்க்கவில்லை. மேற்படி மருத்துவமனையில் விபத்து பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் விடுவிப்பு சான்று தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மருத்துவமனையில் சிகிச்சைக்காக மூன்று நாட்கள் இருந்தேன். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்து சிசிச்சை பெற்றபொழுது நல்ல நிலையில் விடுவிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி தொடர் சிகிச்சை மேற்கொண்டேனா என்றால் தற்போது வரை இல்லை. எனக்கு மேற்படி விபத்தினால் நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. எனது வாகனத்தின் அசல் ஆர்.சி புத்தகத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் கோரிய இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல. தலைகவசம் அணிந்திருந்தால்

தலைகாயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. இரண்டாவது எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.